III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

MCOP. 72/2024

Deposition of witness for the Petitioner /PW 2
Respondent solemnly by Selvi. U.Dharani, Assistant
in accordance with the provision of Act I for 1873 on 07-03-2025

| | | | |
|---|---|---|---|
| Name | : புஷ்பா | Village | : |
| Husband's Name | : கணபதி | Taluk | : |
| Age | : | Calling | : |

மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு விசாரணை</u>**

எனது கணவர் ஓட்டி சென்ற இரு சக்கர வாகனத்தில் பதிவு எண் எனக்கு தெரியாது. எனது கணவர் ஓட்டி சென்ற வாகனத்தின் பதிவு சான்றிதழ் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பிரமான வாக்குமூலத்திலும் மனுவிலும் குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்கள் இரண்டும் ஒன்றுதான். அதில் வைத்து தான் எனது கணவர் பழ வியாபாரம் செய்து வந்தார். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்தை பற்றி எனது கணவர் போல வியாபாரம் செய்து வரும் ஒருவர் தகவல் தெரிவித்தார். எனது கணவர் செய்து வந்த தொழில் மற்றும் வருமானம் பற்றி ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆதலால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.